1982 மார்ச் 11]

திரு பெ. சு. திருவேங்கிடம் : துணைத் தலைவரவர்களே, இந்த 50 உரிமங்கள் வழங்கியதிலே எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த 50 உரிமங்கள் என்பது ஒவ்வொரு ஆண்டுக்கும் ஐம்பதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்கு தந்திருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் மனுச்செய்த எல்லோருக்கும் தந்திருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருசில மாவட்டங்களிலிருந்து அதிகமாக மனுக்கள் வருகின்றன ; ஒரு சில மாவட்டங்களிலிருந்து குறைவாக வருகின்றன ; சில மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வராமல் இருக்கும் இங்கே வந்த மனுக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் ஆண்டு ஒன்றுக்கு 50 உரிமங்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மத்திய அரசு எப்போதெல்லாம் அனுமதிக்கிறார்களோ அப்போதெல்லாம் கொடுக்கிறோம்.

## உபயோகமற்ற அரசுப் பேருந்துகள்

*வினா எண் 472—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பஸ்களில் condemn ஆவதை அரசு பள்ளிகட்கு மான்ய விலையில் அல்லது இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) : போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளைப் பள்ளிகட்கு இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் அத்தகைய பேருந்துகளை மான்ய விலையில் பள்ளிகட்கு விற்கும் பொருட்டு எல்லா போக்குவரத்துக் கழக இயக்குநர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : துணைத் தலைவரவர்களே, இந்த அரசு கண்டமான பழைய பேருந்துகளை மானிய விலையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு பஸ்ஸை என்ன விலைக்குக் கொடுக்க யோசனைக் கூறப்பட்டிருக்கிறது? அரசினுடைய பள்ளிகளுக்கு அரசாங்கமே இனாமாகக் கொடுத்து உதவ முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அரசினுடைய பள்ளியாக இருந்தாலும் அரசாங்கம்தான் அதற்குப் பணம் கொடுக்கிறது. போக்குவரத்துக் கழகம் என்பது

[1982 மார்ச் 11

தனியாக இருப்பதால், அதற்கு தனியாக வரவு-செலவுத் திட்டம் இருப்பதால் இனாமாக கொடுப்பதில்லை. மானிய விலையில் அரசாங்கப் பள்ளியாக இருந்தால் 40,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம், அரசு உதவி பெறும் தனியார் பள்ளியாக இருந்தால் 45,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம், அங்கீகாரம் இல்லாமல் இயங்கி வருகின்ற பள்ளியாக இருந்தால் 50,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, போக்கு வரத்து இலாகாவிலுள்ள கண்டம் செய்த கார்களைப் பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கு மத்திய அரசு வழங்குவதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநில அரசு வழங்க திட்டம் ஏதாவது இருக்கிறதா? இல்லை என்றால் அதை பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய யோசனை மிக நல்ல யோசனை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வரவேற்பார்கள். என்று கருதுகிறேன். ஆனால் 234 உறுப்பினர்களுக்கும் கார்கள் கொடுக்கக்கூடிய அளவில் போக்குவரத்துத் துறையில் கார்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. சி. டிஇ பிரபாகர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி கண்டம் ஆகிற பேருந்துகளை பள்ளிகளுக்கு மானிய விலையில் தருவதை விட போக்குவரத்துத் துறையே அந்த பேருந்துகளை மினி பஸ்களாக மாற்றி சிறு பேருந்துகளாக பல்வேறு கிராமங்களுக்கும் விடுவதாக இருந்தால் நலமாக இருக்கும் இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?

**மாபுண்மிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, மினி பேருந்துகளாக மாற்ற வேண்டும் என்பதற்காக பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கின்ற பேருந்துகளை நிறுத்த வேண்டியதில்லை. கொடுத்தது போக மீதம் இருக்கிற பேருந்துகளை பெருநகர்ப் பிரிவில் அப்படி மாற்றி இயக்குகிறோம். அது தொடர்ந்து நடக்கிறது.

**திரு. இல. பலராமன் :** துணை தலைவரவர்களே, இந்த பழுதுபட்ட பேருந்துகளை பள்ளிக்கு மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கு வழங்க அரசு ஆலோசிக்குமா? பாலிடெக்னிக் போன்ற தொழில் பள்ளிகளுக்கும் வழங்கப்படுமா? சில இடங்களுக்கு அளிப்பதில் சில நிர்ப்பந்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிர்ப்பந்தங்கள் தவிர்க்கப்பட்டு, எந்த இடமாக இருந்தாலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே பள்ளிகள், கல்லூரிகள் மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கு எல்லாம் வழங்க இடமிருக்கிறது. சட்டக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; மருத்துவக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; எல்லா இடங்களிலும் படிப்பு நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

வஞ்சிபாளையத்தில் ரயில்பெட்டி தொழிற்சாலை

*வினா எண் 473— திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், அவினாசி தாலுகா, அவினாசிக்கு அருகாமையிலுள்ள வஞ்சிபாளையம் என்ற கிராமத்தில் ரயில் பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) மத்திய அரசிடம் வற்புறுத்தி இதை பெற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சட்டமன்ற TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள போக்குவரத்து நெரிசல்.

வினா எண் 474— திரு. எம். சின்னசாமி, திரு. இரா தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை-சென்ட்ரல் நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் மிகுந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?